# உடன்பிறப்பே... 98

ர.பிரகாசு

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கவிஞர் முடியரசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



# கவிஞர் முடியரசன்
# திராவிட நாட்டின் வானம்பாடி!

*‘தன்மானக்குன்றம்-கொள்கை மாறாச்சிங்கம் -திராவிட இயக்கத்தின் முன்னோடிக்கவிஞர், இயக்கத்தின் ஈடுஇணையற்ற தளகர்த்தாக்களில் ஒருவர் ... இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று கோலோச்சுகிறதென்றால்.... அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம்’ என முத்தமிழறிஞர் கலைஞரால் போற்றப்பட்ட அன்பு உடன்பிறப்பு. அவர்தான், ‘திராவிட நாட்டின் வானம்பாடி’ எனப் போற்றப்பட்ட கவிஞர் முடியரசன்.*

*“கவிஞன் யார் என்பதற்கு எடுத்துக்காட்டு தானய்யா பகுத்தறிவுக் கவிஞர் முடியரசன்” என்கிற பெரியாரின் பாராட்டுப் பத்திரம் முடியரசின் கொள்கை உரத்துக்கு காலத்துக்கும் அழியாத சான்று!*

*தேனி மாவட்டம், பெரியகுளம் நகரில் சுப்பராயலு - சீதாலட்சுமி தம்பதிக்கு 1920-ஆம் ஆண்டு அக்டோபர் 7-அன்று மகனாகப் பிறந்தவர். அப்போது பெற்றோர் வைத்த பெயர் துரைராசு.*

*பெரியகுளத்தில் பள்ளிக்கூடம் சேர்ந்தவர், பெற்றோர் பிழைப்பு தேடி காரைக்குடிக்கு குடிபெயர, அங்கிருந்த வேந்தன்பட்டி, திண்ணைப்பள்ளியில் தொடக்கக் கல்வியைத் தொடர்ந்தார். அதன்பிறகு மேலைபுரி சன்மார்க்க சங்கத்தில் ஐந்து, ஆறாம் வகுப்புகள் படித்தபோது பக்தி இலக்கியங் களையும், இலக்கணத்தையும் கற்றுத்தேர்ந்தார். பெரும் புலவரான தனது தாய்மாமா துரைசாமி மூலமாக, இளம் வயதிலேயே மொழிப் பற்றையும் இலக்கிய உணர்வையும் வளர்த்துக்கொண்டார்.*

## அண்ணாவைக் கண்டார்!

*தனது 21-வது வயதில் ‘சாதி என்பது நமக்கு ஏனோ?’ என்ற கவிதையை ‘திராவிட நாடு’ இதழுக்கு அனுப்பிவைத்தார். அண்ணா அந்தக் கவிதையைப் பிரசுரிக்க, பெரும் உத்வேகம் பெற்றார் முடியரசன். அதே ஆண்டில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தோடும் தொடர்பு கிடைத்தது.*

*தனது 20 வயது வரை பக்திப்பாடல்கள் பாடி வந்த முடியரசன், 21-வது வயதில் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடத் தொடங்கி னார். அவரது கவிதைகளில் உணர்ச்சிப் பெருக்கோடு தெறித்த வார்த்தைகளும், அந்த வார்த்தைகளில் சரளமாக விளையாடிய தமிழ்ச்செழுமையும் அண்ணாவை ஈர்த்தன. தொடர்ந்து ‘திராவிட நாடு’ இதழ்களின் அட்டைகளை முடியரசனின் கவிதைகளால் அலங்கரித்தார் அண்ணா.*

*1945-இல் திருப்பத்தூரில் பெரியார் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டிற்குச் சென்றபோது, அண்ணாவுடனான நேரடிச் சந்திப்பு நிகழ்ந்தது. அந்த மாநாட்டில், தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். அண்ணாவின் அடுக்குமொழிப் பேச்சில் சொக்கிப்போன ‘துரைராசு’, மறுநாளே ‘முடியரசன்’ என தனது பெயரை மாற்றிக் கொண்டார். மீண்டும் அதே திருப்பத்தூரில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் உரையைக் கேட்டு, உணர்வுகளால் உந்தப்பட்டார்.*

## குன்றாத கொள்கைக்காரர்!

*திரை- இலக்கியத்தில் திராவிட இயக்கம் முழுமையாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி யிருந்த காலத்தில், மரபுக் கவிஞராக அடையாளப்பட்டவர். 1944-இல் நாடகங்களில் பாடல்கள், உரையாடல் எழுதுவதற்காக நவாப் டி.எஸ்.இராச மாணிக்கத்தின் ஸ்ரீதேவி பாலவினோத சபாவில் சேர்ந்தார். ஆனால், நாடகக் குழுவின் கட்டுப்பாடுகளும் நடைமுறை களும் தன் கொள்கைகளுக்கு உட்பட்டதாக இல்லை என அங்கிருந்து வெளியேறினார்.*

*திரைத்துறை ஆர்வத்துடன் சென்னைக்குப் புறப்பட்டு வந்தவர், எம்.ஆர்.இராதாவின் ‘கண்ணாடி மாளிகை’ படத்திற்கு உரையாடலும், பாடல்களும் எழுதினார். ஆனால், திரைத் துறையும் அதன் இயல்புகளும் ஒத்துவராததால் கல்விப்பணிக்குத் திரும்பினார். கூடவே அவரது எழுத்தின் மூலம் கல(ழ)கப் பணி தொடர்ந்தது.*

## கவிதையில் கழகப் பணி!

*1947-1949 வரை சென்னை முத்தியால்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். திராவிடர் கழகத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்த காலகட்டம் அது. பெரியாரோடும் அண்ணா வோடும் மாசற்ற அன்பைப் பாராட்டியவர், பெரியாரிடம் இருந்து கற்ற கொள்கை உறுதியைக் குலைத்துக்கொள்ளாமல், குழப்பமின்றி அண்ணாவின் பக்கம் சாய்ந்தார். அதுமட்டுமல்ல, இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற காலமும் கூட அது. அப்போது பள்ளி வகுப்பறைக்குள் இவர் நுழைந்து இருக்கையில் அமர்ந்ததுமே ‘வெல்க தமிழ்’ என்று மாணவர்கள் முழங்குவர்.*

**2000-ஆம் ஆண்டில் அவருடைய நூல்களை நாட்டுடைமையாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். கழக அடையாளத்துடன் எழுத்துலகின் அரசனாக, இன்றும் உயர்ந்து நிற்கிறார் முடியரசன்!**

*‘குடிஅரசு’, ‘திராவிட நாடு’, ‘முரசொலி’, ‘முத்தாரம்’ என நாற்பதுக்கும் மேற்பட்ட திராவிட இயக்க இதழ்களில் கவிதைகளால் தமிழில் முழங்கியவரின் மாணவர்கள் ‘வெல்க தமிழ்’ என முழங்காமல் இருந்திருந்தால்தான் ஆச்சரியம்!*

*1949-ஆம் ஆண்டு பிப்ரவரியில் கலைச்செல்வி என்பவரை சாதி மறுப்புத் திருமணம் புரிந்துகொண்டார். அதன்பிறகு, காரைக்குடியில் 29 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.*

*“சாதி ஒழியவேண்டும் எனக் கவிதையிலும் மேடையிலும் முழங்கிய கவிஞர்களுள் அவற்றைத் தன் வாழ்வில் கடைப்பிடித்தவர்கள் இவரைத் தவிர, வேறு யாராவது இருக்கிறார்களா எனத் தெரியவில்லை’ என குன்றக்குடி அடிகளாரால் போற்றப்பட்டவர் முடியரசன்.*

## ஓய்வுக்குப்பின் ஓய்வில்லை!

*1964-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டக்களம் தமிழ்நாட்டை தகிக்கச் செய்துகொண்டிருந்த போது, மொழிக்கொரு காப்பியம் என முடியரசன் படைத்த ‘பூங்கொடி’ கவிதைத் தொகுப்பு, தமிழ் உணர்வாளர்களையும் இளைஞர்களையும் வீறுகொள்ளச் செய்தது. அதன் காரணமாக, இந்நூல் தடைசெய்ய ஏற்பாடு நடைபெற்றது. அந்த நூலுக்காக அவர்மீது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறி வழக்கும் தொடரப்பட்டது. 1967-இல் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு ‘பூங்கொடி’ நூலுக்கான தடை ஏற்பாடு விலக்கிக்கொள்ளப்பட்டது.*

*1978-இல் ஓய்வு பெற்ற பிறகு முழுநேரமாக கழகப் பணிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டார். கழக ஆட்சிக்காலங்களில் அரசவைக் கவிஞர் பொறுப்பு அவரைத் தேடி வந்தபோதும், தனது அரசியல் பணிகளுக்கு அரசுப் பொறுப்பு தடையாக இருக்கும் என்று ஏற்க மறுத்தார்.*

*கழக இலக்கிய அணியின் முதல் தலைவ ராகப் பொறுப்பேற்றவர். 1979-ஆம் ஆண்டு கலைஞர் பிறந்தநாளையொட்டி கழக இலக்கிய அணி சார்பில், பாவரங்கம் நடத்தி, ‘விரித்துவரும் வலையிலெல்லாம் தப்பி நின்று, வீழாமல் சிரிக்கின்ற தமிழணங்கே’ என்று கவிதை வடித்தார். கலைஞரின் நெஞ்சுரத்தை, இதைவிட வலிமையாக எவரும் உணர்த்தியதில்லை.*

*அந்த அர்ப்பணிப்புமிக்க உடன்பிறப்பின் உழைப்பை அங்கீகரிக்கும் விதமாக, 1988-இல் கழக முப்பெரும் விழாவில் ‘கலைஞர் விருது’, 1989-இல் தமிழ்நாடு அரசின் சார்பில் ‘பாவேந்தர் விருது’ வழங்கி கௌரவித்தார் கலைஞர்.*

**“பூமியில்வாழ் நாளெலாம் வாட்டும்
நலிவே உறினும் நற்றமிழே
ஆளாதல் திண்ணம் அடியேன்**

*என கடைசிக் கவிதை வரை தமிழை சுவாசித்த அந்த ஈடற்ற உடன்பிறப்பின் இயக்கம் 03.12.1998-இல் நின்றது. 2000-ஆம் ஆண்டில் அவருடைய நூல்களை நாட்டுடைமை யாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். கழக அடையாளத்துடன் எழுத்துலகின் அரசனாக, இன்றும் உயர்ந்து நிற்கிறார் முடியரசன்!*

**...துடிக்கும்**

### என் மூத்த வழித்தோன்றல்

*18 கவிதை நூல்கள், 3 காப்பியங்கள், 3 கதைகள், 2 கட்டுரைத் தொகுப்புகள், 2 கடித இலக்கியம், 4 பாட நூல்கள் என 30-க்கும் மேற்பட்ட நூல்களை அவர் படைத்துள்ளார்.* **‘காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்; கைம்மாறு விளைந்து புகழ் பெறுதல் வேண்டி, மாசற்றக் கொள்கைக்கு மாறாய் நெஞ்சை மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்’** *எனப் பாடி, அதன்படி வாழ்ந்து காட்டியவர். அதனால்தான் திராவிட இயக்கச் சார்போடு நூற்றுக்கணக்கான கவிஞர்கள் இருந்தபோதும், ‘என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே’ என புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாராட்டினார்.*

*அதுமட்டுமல்ல, ‘திராவிட நாட்டின் வானம்பாடி கவிஞர்’ என்று அண்ணாவும் வாழ்த்தியிருக் கிறார்.*

## இரு முக்கிய நிகழ்வுகள்!

இன்று சென்னையில் இரண்டு முக்கியமான நிகழ்ச்சிகள் நடக்கவிருக்கின்றன. திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய ‘சுயமரியாதை இயக்க வரலாறு’ நூல் வெளியீட்டு விழா காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் நூலை வெளியிட, தி.மு.கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் நூலைப் பெற்றுக்கொள்கிறார். திராவிட இயக்கத்தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், தி.மு.க. தலைமை செய்தித்தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோர் நூல் குறித்து ஆய்வுரை ஆற்றுகிறார்கள்.

இன்னொரு நிகழ்ச்சி, இன்று மாலை 6 மணியளவில் அன்பகத்தில், ‘வக்பு வாரிய திருத்த மசோதா’ குறித்த ஆய்வரங்கம். தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் ஆ.ராசா, மாநில சிறுபான்மையினர் நலவாரிய முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், இடதுசாரி செயற்பாட்டாளர் மருதையன், ஆய்வாளர் முகமது நதீம் ஆகியோர் கருத்துரை வழங்கவிருக்கிறார்கள்.

திராவிட இயக்கம் குறித்த பல முக்கியமான நூல்களை எழுதும் மாபெரும் வரலாற்றுப் பணியைச் செய்துவரும் க.திருநாவுக்கரசு எழுதியுள்ள ’சுயமரியாதை இயக்க வரலாறு’ நூல் சுயமரியாதை இயக்க நூற்றாண்டையொட்டி வெளிவருவது முக்கியமானது. சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிக்கும் வகையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த ‘வக்பு வாரிய மசோதா’, எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பின் காரணமாக நாடாளுமன்றக் கூட்டுக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. அங்கும் எதிர்க்கட்சிகளின் கருத்து புறக்கணிக்கப்பட்டபோது, அதை எதிர்த்துப் போராடி இடைநீக்கம் செய்யப்பட்டவர் ஆ.ராசா அவர்கள். எனவே அவருடைய உரை கூடுதல் பொருத்தமுடையது.

கடந்தகால வரலாறையும் சமகால அரசியல் கடமையையும் அறிய விரும்புவோருக்கான இரு நிகழ்வுகள் ஒரேநாளில் நடைபெறுகின்றன. வாய்ப்புள்ளவர்கள் கலந்துகொள்ளவும்.

## :.ப்ளாஷ்பேக்



### ஊக்கப்படுத்திய தலைவர்!



குறிஞ்சி கணேசன்

1992-ஆம் ஆண்டு, திருவொற்றியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.பழனிச்சாமி அவர்களின் ஏற்பாட்டில், திருவொற்றியூர் நகரம், 15-வது வட்ட இளைஞர் அணிச் செயலாளராக நான் பொறுப்பேற்ற பிறகு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளராக இருந்த, இன்றைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ‘இளையசூரியன்’ பத்திரிகை அலுவலகத்தில் சந்தித்து, வாழ்த்துப் பெற்றேன். அப்போது தலைவர் அவர்கள், என்னிடம் நகர இளைஞர் அணி நிர்வாகத்தோடு இணைந்து சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று சொல்லி, என்னை ஊக்கப்படுத்தி வாழ்த்தி அனுப்பினார்.

**– குறிஞ்சி கணேசன், மாவட்ட அவைத் தலைவர், சென்னை வடகிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மாநகர் ஆன மதுரை!

1971-இல் மதுரை நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றமாகத் தரம் உயர்த்தப்பட்டது. நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் மாநகராட்சி மன்றத்தைத் தொடங்கிவைத்தார். நகராட்சி உறுப்பினர்கள், அப்படியே மாநகராட்சி உறுப்பினர்கள் ஆக்கப்பட்டனர். ‘மதுரை’ முத்து மதுரை மாநகரின் முதல் மேயரானார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

757

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131